**MCOP.No.168/2023** **P.W.1** **நாள் 24.02.2026**

**தாட்சாயினி க.பெ. காசிநாதன்**

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு மனுதாரர் தரப்பு முதல் விசாரணையின் தொடர்ச்சி**

எனது தரப்பு ஆவணமாக கீழ்க்கண்டவற்றை தாக்கல் செய்கிறேன்.

1.13.05.2023 தேதியிட்ட உளுந்தூர்பேட்டை காவல் நிலைய குற்ற எண்.225/2023 ஆக பதிவு செய்யப்பட்ட முதல் தகவல் அறிக்கை (நகல்) – **ம.சா.ஆ.1 ஆகும்.**

2. 07.05.2023 தேதியிட்ட இறந்து போன காசிநாதன் பெயரில் ஏற்பட்ட விபத்து பதிவேட்டு (நகல்) – **ம.சா.ஆ.2 ஆகும்.**

3. 14.05.2023 தேதியிட்ட இறந்து போன காசிநாதன் பெயரில் ஏற்பட்ட பிரேத பரிசோதனை அறிக்கை(நகல்) – **ம.சா.ஆ.3 ஆகும்.**

4. 19.05.2023 தேதியிட்ட பதிவு எண். TN 12 S 8161 என்ற எண் கொண்ட நான்கு சக்கர வாகனத்தின் பெயரில் ஏற்பட்ட மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை (நகல்) – **ம.சா.ஆ.4 ஆகும்.**

5. பதிவு எண். TN 12 S 8161 என்ற எண் கொண்ட நான்கு சக்கர வாகனத்தின் பெயரில் ஏற்பட்ட பதிவு சான்றிதழ் (நகல்) – **ம.சா.ஆ.5 ஆகும்.**

6. 19.05.2023 தேதியிட்ட பதிவு எண். TN 31 CW 9954 என்ற எண் கொண்ட இரு சக்கர வாகனத்தின் பெயரில் ஏற்பட்ட மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை (நகல்) – **ம.சா.ஆ.6 ஆகும்.**

7. 19.05.2023 தேதியிட்ட பதிவு எண். TN 31 CW 9954 என்ற எண் கொண்ட இரு சக்கர வாகனத்தின் பெயரில் ஏற்பட்ட பதிவு சான்றிதழ் (நகல்) – **ம.சா.ஆ.7 ஆகும்.**

8. பதிவு எண். TN 12 S 8161 என்ற எண் கொண்ட நான்கு சக்கர வாகனத்தின் பெயரில் ஏற்பட்ட காப்பீட்டு சான்றிதழ் (நகல்) – **ம.சா.ஆ.8 ஆகும்.**

9. அன்பழகன் என்பவர் பெயரில் ஏற்பட்ட ஓட்டுனர் உரிமம் (நகல்) – **ம.சா.ஆ.9 ஆகும்.**

10. இறந்து போன காசிநாதன் என்பவர் பெயரில் ஏற்பட்ட ஓட்டுனர் உரிமம் (நகல்) – **ம.சா.ஆ.10 ஆகும்.**

11. 13.05.2023 தேதியிட்ட உளுந்தூர்பேட்டை காவல் ஆய்வாளரால் தாக்கல் செய்யப்பட்ட சட்ட பிரிவு மாறுதல் அறிக்கை – **ம.சா.ஆ.11 ஆகும்.**

12. 25.06.2023 தேதியிட்ட உளுந்தூர்பேட்டை காவல் ஆய்வாளரால் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கை – **ம.சா.ஆ.12 ஆகும்.**

13. இறந்து போன காசிநாதன் பெயரில் ஏற்பட்ட NLC INCOSERVE நிறுவனத்தால் வழங்கப்பட்ட அடையாள அட்டை (அசல்) – **ம.சா.ஆ.13 ஆகும்.**

14. இறந்து போன காசிநாதன் பெயரில் ஏற்பட்ட NLC INCOSERVE நிறுவனத்தால் வழங்கப்பட்ட 2023 மார்ச் மாதத்திற்கான சம்பள பட்டியல் (அசல்) – **ம.சா.ஆ.14 ஆகும்.** ( 2–ம் எதிர்மனுதாரர் ஆட்பனையின் பெயரில் குறியீடு செய்யப்படுகிறது)

15. இறந்து போன காசிநாதன் பெயரில் ஏற்பட்ட ஆதார் அடையாள அட்டை எண்.7871 5077 1009 (நகல்) – **ம.சா.ஆ.15 ஆகும்.** (அசலுடன் ஒப்பீடு செய்து பார்க்கப்பட்டது)

16. 15.06.2023 தேதியிட்ட இறந்து போன காசிநாதன் பெயரில் ஏற்பட்ட வாரிசு சான்றிதழ் (நகல்) **– ம.சா.ஆ.16 ஆகும்.** (அசலுடன் ஒப்பீடு செய்து பார்க்கப்பட்டது)
17. 1–ம் மனுதாரர் தாட்சாயினி பெயரில் ஏற்பட்ட ஆதார் அடையாள அட்டை எண்.8091 3742 8872 (நகல்) **– ம.சா.ஆ.17 ஆகும்.**
18. 2–ம் மனுதாரர் ராம்குமார் பெயரில் ஏற்பட்ட ஆதார் அடையாள அட்டை எண்.5867 0734 0993 (நகல்) **– ம.சா.ஆ.18 ஆகும்.**
19. 3–ம் மனுதாரர் திரிஷ்நாத் பெயரில் ஏற்பட்ட ஆதார் அடையாள அட்டை எண்.4646 2362 8222 (நகல்) **– ம.சா.ஆ.19 ஆகும்.**
20. 4–ம் மனுதாரர் ஹேமஹாசினி பெயரில் ஏற்பட்ட ஆதார் அடையாள அட்டை எண்.4079 2346 3171 (நகல்) **– ம.சா.ஆ.20 ஆகும்.**
21. மனுதாரர் பெயரில் ஏற்பட்ட இந்தியன் வங்கி சேமிப்பு கணக்கு புத்தகம் (நகல்) **– ம.சா.ஆ. 21 ஆகும்.**

ஆகவே, நான் எனது மனுவில் கோரியபடி உத்தரவு வழங்கும் படி வேண்டுகிறேன்.

**<u>2–ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

காசிநாதனின் தாயார் கமலாட்சியும், தந்தை அய்யாசாமியும் எனக்கு திருமணம் ஆவதற்கு முன்பே இறந்துவிட்டார். விபத்தை நான் நேரடியாக பார்க்கவில்லை. 07.05.2023 ம் தேதியன்று மாலை 3.50 மணியளவில் உளுந்தூர்பேட்டை அஜிஸ் நகர் ரவுண்டானா அருகே விபத்து நடந்தது. விபத்தின்போது எனது கணவர் TN 31 CW 9954 என்ற எண் கொண்ட இரு சக்கர வாகனத்தில் சென்றார். அந்த வாகனம் எனது கணவருக்கு சொந்தமானதாகும். இரு சக்கர வாகனத்திற்கு காப்பீடு செய்யப்படவில்லை. எனது கணவருக்கு ஓட்டுநர் உரிமம் உள்ளது. விபத்து சமயத்தில் இரு சக்கர வாகனத்தை ஓட்டுவதற்கு எனது கணவருக்கு உரிய ஓட்டுநர் உரிமம் இல்லையென்றால் சரியல்ல. விபத்து நடந்த இடத்தை பார்த்தேன். அதற்கு முன்பாகவே எனது கணவரை உளுந்தூர்பேட்டை அரசு மருத்துவமனையில் சேர்த்துவிட்டார்கள். அதன் பிறகு முண்டியம்பாக்கம் அரசு மருத்துவமனையில் மேல் சிகிச்சைக்காக சேர்க்கப்பட்டார்.

நான் வேலைக்கு எதுவும் செல்லவில்லை. எனது கணவர் 10–ம் வகுப்பு வரை படித்திருந்தார். எனது கணவர் NLC ன் கீழ் இயங்கும் இன்கோசர்வ் நிறுவனத்தில் துணை பொது உதவி மேலாளரின் உதவியாளராக பணிபுரிந்து வந்தார். விபத்தின்போது எனது கணவருக்கு 53 வயதாகும். அவர் கடந்த 12.06.1970 ல் பிறந்தார் என்றால் சரிதான். அவருக்கு மாத சம்பளமாக ரூ.25,000/– பெற்று வந்தார். கூடுதல் பணி செய்யும்போது நேரடியாக தொகை தருவார்கள். அதை சேர்த்தால் மாதம் ரூ.40,000/– க்கு மேல் வரும். எனது கணவரின் சம்பளம் அவரது வங்கி கணக்கில் தான் வரும் என்றால் சரிதான். வங்கி கணக்கு குறித்த விவரங்களை தாக்கல் செய்யவில்லை என்றால்

சரிதான். எனது கணவர் இறந்து போன நாளுக்கு 2 மாதங்களுக்கு முன்னர் மார்ச் 2023 ல் ஏற்பட்ட சம்பள பட்டியலை தாக்கல் செய்துள்ளேன். எனது கணவர் 34 ஆண்டுகளாக அந்த நிறுவனத்தில் பணிபுரிந்து வந்தார். எனது கணவர் இறந்த பிறகு EPF பணமாக ரூ.4,00,000/– கொடுத்தார்கள். வேறு எந்த தொகையும் கொடுக்கவில்லை. விபத்தில் இறந்ததற்காக தனிப்பட்ட முறையில் தொகை எதுவும் கொடுக்கவில்லை. எனது கணவர் நெய்வேலி நிறுவனத்திற்கு வேலை செய்வதற்காகத்தான் விபத்து நாள் அன்று இரு சக்கர வாகனத்தில் சென்றார்.

தொழிலாளர் நீதிமன்றத்தில் இழப்பீடு கோரி மனு எதுவும் தாக்கல் செய்யவில்லை. எனது கணவரின் கவனக்குறைவாலும், அஜாக்கிரதையாலும் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. எனது கணவருக்கு தலையிலும், கை, கால்களிலும் காயம் ஏற்பட்டது. விபத்து சமயத்தில் எனது கணவர் தலைக்கவசம் அணியவில்லை என்றால் சரியல்ல. தலைக்கவசம் அணிந்திருந்தால் தலையில் அடிப்பட்டிருக்காது என்றால் சரியல்ல. எனது கணவரின் வருமானத்தை அவர் பணிபுரிந்து வந்த நிறுவனம் மூலம் தான் நிரூபிக்க வேண்டும் என்றால் சரியல்ல. அதிகப்படியான நஷ்ட ஈடு கோருகிறேன் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை**</u>

இல்லை